

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

சிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்


பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா.ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபூபு | - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 95 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஸ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# ஆயிஷா இரா.நடராசன் காட்டம் வகுப்பறை

**வே.சக்திவேலு,**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

---

வகுப்பறை கற்பவருக்கே முக்கிய இடமளிக்கப்படுகிறது. மாணவர்களிடையே தனியாள் வேற்றுமைகள் இருப்பதை ஆசிரியர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும். மீத்தறமிக்கவர்கள், சராசரியானவர்கள், மெதுவாக கற்போர் ஆகியோரை உள்ளடக்கியது தான் வகுப்பறை. ஒவ்வொரு மாணவருக்கும் ஏற்ற வகையில் கற்பிப்பதே சிறப்பானதாகும். மாணவரது புலன்காட்சி, சிந்தனை, ஆய்ந்தறிதல், நுண்ணறிவு, நினைவிலிருத்தல் ஆகியவை கற்றல் செயல்பாடுகளில் இடம் பெறுகின்றன. வகுப்பறையில் கொடுக்கப்படும் புற வசதிகள், சமூகச் சூழல்கள், ஆசிரியரது மனப்பான்மை, நடத்தை, வகுப்பறை இடைவினைகள் ஆகியவை இடம் பெறுகின்றன. சுருக்கமாக இவையனைத்தையும் 'வகுப்பறை சூழல்' என்றழைக்கிறோம்.

**ஆயிஷா நடராசன் காட்டும் வகுப்பறை**

2014 ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருது பெற்ற எழுத்தாளரும், இயற்பியல், கல்வி மேலாண்மை மற்றும் உளவியல் முதுகலைப் பட்டம் பெற்றவருமான ஆயிஷா நடராசன் அவர்கள் எழுதிய 'வன்முறையில்லா வகுப்பறை' எனும் நூலை முதன்மையாகக் கொண்டே இக்கட்டுரை அமையவிருக்கிறது.

**குழந்தைகள் வெறுக்காத பள்ளியாக**

பெரும்பாலான குழந்தைகள் பள்ளியைக் கண்டு அஞ்சுகிறார்கள். பெரும்பான்மைக் குழந்தைகள் புரிந்து கற்பது இல்லை. குழந்தைகள் மனச்சோர்வு, அவமதிப்பு, பெரும் பதற்றம் இவற்றோடு வீடு திரும்புகிறார்கள். கல்விச் சூழல் தரும் மன அழுத்தம் தாங்காமல் வீட்டை விட்டு ஓடுதல் முதல் தற்கொலை செய்துகொள்ளுதல் வரை அதீத முடிவுகள் எடுக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை முன் எப்போதையும் விட பல மடங்கு அதிகரித்துள்ளது. நம் நாட்டில் பள்ளி செல்லும் குழந்தைகளில் ஏழு பேரில் ஒருவர் வாழ்வை முடித்துக்கொள்ளும் அபாய மனநிலையில் உள்ளதை உறுதி செய்தது.

குழந்தைகள் பள்ளியை வெறுப்பது இருக்கட்டும். அவர்களுக்கு அங்கே என்ன பாதுகாப்பு இருக்கிறது என்பது மிகவும் கவலைக்குரியதாகி விட்டது. உண்மைதானே! சேலத்தில் பிரம்படியால் கண்களை இழந்த மழலை... பெங்களுருவில் 'ஆசிரியர் போர்வை'யில் இருந்து கயவனால் பாலியால் வன்முறையில் உட்படுத்தப்பட்ட குழந்தை... சென்னையில் தன் சொந்த வகுப்பறைக்குள் ஆசிரியையை கத்தியால் கழுத்தறுத்த ஆத்திர மழலை... இவை எல்லாம் நமக்கு உணர்த்துவது என்ன?

வகுப்பறை வன்முறை என்பது இன்றைய ஆசிரியர்களின் மிகப்பெரிய சவாலாக உள்ளது. குழந்தைகளை அடிக்கக்கூடாது, திட்டக்கூடாது, எதுவுமே சொல்லக்கூடாது என்றால் இதன் பொருள் என்ன? ஒருபுறம் குழந்தைகளின் தலையைத் திறந்து பாடப்பொருளை கொட்டித் தீர்க்கத் தூண்டும் பாடச்சுமை. மற்றொருபுறம் குழந்தைகள் உரிமை என்னும் பெயரில் மிரட்டல்... தேர்ச்சி சதவிகிதம் அதிகரித்துக் காட்டாத ஆசிரியர்களுக்கு துறை நடவடிக்கை... இந்த துயரமான சூழலுக்கு தன்னை கல்விலாளர்கள் என கூறிக்கொள்பவர்கள் தரும் தீர்வு என்ன? 'குழந்தைகளை அவர்கள் பாட்டுக்கு விட்டு விடுங்கள். தனக்கு தேவையானதை அவர்களே கற்றுக்கொள்வார்கள்' என்பது உண்மையா? பள்ளிக்கூடங்கள் பெரும்பான்மைக் குழந்தைகளை வாட்டி வதைக்கின்றன என்பதற்கான தீவிர எதிர்வினை என இந்த கல்வியாளர்களை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

நமக்குத் தேவை குழந்தைகள் தைரியமாக குதூகலிக்கும் ஒரு வகுப்பறை. ஆசிரியர் - மாணவர் உறவில் நேர்மறை ஒழுக்கத்தின் கூறுகள் நிலவுகிற, குழந்தைகள் தங்களை பாதுகாப்பாக உணருகிற, அதேசமயம், கற்றல் தடையின்றி நடக்கும் ஒரு வகுப்பறை. அதற்கு ஆசிரியர்கள் தண்டனை வழி ஒழுக்க முறையைத் துறுத்து அதற்கான மாற்று என்ன என்பதை யோசிக்க வேண்டும். வகுப்பறைகளைப் போர்க்களமாக இன்றி, கற்றலுக்கான சொர்க்கபுரியாக ஆக்கும் பாதையை நோக்கித்தான் நாம் பயணிக்க வேண்டும். இந்தப் பக்கங்களைத் தொடர்ந்து வரும் ஒரு ஆசிரியர் தனது பணி இடத்தின் சவால்களை சரித்திரமாக்கும் இயல் ஊக்கத்தை பெறுதலே நமது நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

## குழந்தைகளை பள்ளியில் மதிக்கப்படல் வேண்டும்

எதிரில் அமர்ந்திருப்பது உயிருள்ள மனித உருவங்கள் என்ற மாயை கூட இல்லாமல் இயந்திரம் போல தனக்கு வழங்கப்பட்ட பாடப்பொருளை அவர்களது தலையைத் திறந்து வங்கியில் பணம் போடுவது போலவும் குப்பை கொட்டுவது போலவும் கொட்டி நிரப்பும் பணியை மணிக்கணக்கில் எவ்வகை இடைவெளியுமின்றி எட்டு ஒன்பது

மணி நேரம் தொடரும் அஃறிணை செயல்பாடாக கல்வி மாறி விட்டது எனும் குற்றச்சாட்டில் நியாயம் இருக்கிறது.

கல்வியின் சக்கரவர்த்தி குழந்தையே. குழந்தை எந்த அளவிற்கு வகுப்பறையில் மதிக்கப்படுகிறதோ அந்த அளவிற்கு கற்றல் சாத்தியமாகிறது.

ஒழுங்கு – நடத்தை என்பது குழந்தையின் சுய மேலாண்மை என்பதன் மூலம் கட்டமைக்கப்பட வேண்டும். தன்னை மதிக்கும் குழந்தையே அதை அடைய முடியும்.

எது தவறு என்பதன் மீதே கவனம் செலுத்தும் 'தண்டனை' கல்வியை விட, சரியான நடத்தையை தேடி பாராட்டி உயர்த்தும் முன் உதாரண கல்வியே சிறப்பானது.

உடன் இணைந்து விளையாடு... ஒரு போதும் விளையாட்டை வழி நடத்தாதே.

ஒரு கால்பந்து குழுவின் ஒரு விளையாட்டு வீரரை அவமதித்தாலும், பாரபட்சம் காட்டினாலும், அந்த அணி முழுதும் தோற்பது நிச்சயம். அதே குழு தன்னை மதித்து போற்றி ஓர் அணியாக வெற்றி ஊக்கம் பெறும்போது... அணியின் ஒவ்வொருவரும் அணித் தலைவர் போலவே பொறுப்புடன் செயல்படுவதை நாம் காணலாம். பல வெற்றி பெற்ற விளையாட்டுக் குழுக்களுக்கு பின்னே இருக்கும் உண்மை இது. வகுப்பறையும் அதே போலத்தான். அங்கே கற்றல் செயல்பாடு வெற்றி பெற குழந்தைகள் தங்களை குழுவாகவும் குழு தலைமையாகவும் பொறுப்புடன் உணரும்போது அங்கே நடத்தைப் பிறழ்வு, ஒழுங்கீன செயல் இவற்றுக்கு இடம் இருக்குமா என்ன? வன்முறையில்லா வகுப்பறை குறித்த மக்கெரென்கோவின் இறுதி விதி வினோதமானது என்கிறார் நூலாசிரியர்.

**நெறிப்படுத்துதலும் படைப்பாக்க ஆசிரியரும்**

அடிக்கடி நாம் ஒரு ஆசிரியரை ஒளிமிகுந்த மெழுகுவர்த்திக்கு ஒப்பிடுகிறோம். மாணவர்கள் என்போர் எண்ணெய் ஊற்றப்பட்டு திரியுடன் பற்ற தயாராக இருக்கும் அகல்விளக்கு போன்றவர்கள். அகல் விளக்குகள் என்பவை மெழுகுதீபத்தின் அருகே சென்று அதனோடு ஒட்டும்போது மட்டுமே ஒளிபெறும் என்பது நாம் அறிந்தது தானே. பாடங்களை வழங்குவது அச்சான புத்தகங்கள். வாழ்க்கை நெறியைப் புகட்டுபவை ஆசிரியர் எனும் வாழும் புத்தகங்கள். மெழுகின் ஒளி அப்படிப்பட்டது தான். தன்னை வருத்திதான் எத்தனை இன்னல்களுக்கு ஆளானாலும் ஒளிமேல் நோக்கியே கம்பீரமாய் எரிந்து ஆசிரியரின் உயர்வை உலகிற்கு அது காட்டுகிறது.

ஒரு ஆசிரியர் தன் மன முழுமை அடைதலை இது நோக்கமாகக் கொண்டது. தனது பணியை ஆசிரியர்கள் தங்கள்

சுயத்தின் மைய ஆதாரப் புள்ளியாக்குதல், ஆழ்மன நேர்மை கோட்பாடு என்பதன் வழியே விளக்கப்படுகிறது. தனது சுயத்தை முழுமையான ஆசிரியராகும் உண்மைநிலை நோக்கிச் செலுத்துதல். முன் அத்தியாயத்தில் நாம் கண்டதுபோல் ஆசிரிய வேலைக்குப் போகாமல் ஒரு ஆசிரியராகவே வாழ்தல் என்பதே இது.

ஒரு படைப்பாக்க ஆசிரியர் தன் மனதிற்கு உண்மையானவராகி எவ்விதத்திலும் சமரசம் செய்து கொள்ளாத ஒழுங்கும் சுயகட்டுப்பாடும் உள்ளவராக இருத்தல் என்கிற ஒற்றை இலட்சியத்தோடு பயணித்தல் இத்தகைய ஆசிரியர் அச்ச உணர்வு இல்லாதவர். குழந்தைகளின் உற்ற நண்பனாக இருப்பவர். சொல், செயல் மற்றும் எண்ணம் யாவையுமே கற்றல் தொடர்பான செய்திகளை ஒரே மாதிரி செயலூக்கம் பெறுகின்றன.

ஆசிரியரின் மனம் சுயகட்டுப்பாடு மிக்கது. எனவே அது யாருக்கும் அஞ்சாத சுதந்திரம் கொண்டது. அவரை எப்படி அடையாளம் காண்பது? இத்தகைய மனம் குழந்தைகள் பற்றிய முன் அனுபவம் இல்லாதது. படைப்பாக்க கற்றலின் அபரீத சுவையில் அது ஊறி எடுத்த காரணத்தினால் கற்றலின் இறந்த காலம், எதிர்காலம் மறந்து நிகழ்காலத்தின் மீதே அது தன் வகுப்பறையின் கவனத்தைக் குவிக்கிறது. அதே ஓம்ஸ் விதி அதே பித்தாகரஸ் என்றாலும் இன்று புதியதாய் புதுவிதமான படைப்பாக்க உத்தி கொண்டு வகுப்பை அது கலகலப்பாக்கி, எல்லாரையுமே படைப்பாளராக்கும் அதிசயத்தை நிகழ்த்தி, அமைதியாக மணி ஒலித்ததும் அடுத்த வகுப்பறை நொக்கி வேறு உத்திகளுடன் நடக்கிறது. யாரைச்சுற்றிலும் எப்போதும் குழந்தைகள் மகரந்தப் பூக்களை மொய்க்கும் தேனீக்களாக மொய்த்தெடுக்கிறார்களோ... அது தான் அவர்கள்.

எங்கே மாணவர்கள் குதூகலித்து அஞ்சமின்றி பாடப் பொருளை விவாதித்து ஏற்று தன் சொந்தக் கருத்தாக்குகிறார்களோ அந்த வகுப்பின் ஆசிரியர்... அது தான் அவர்கள். தனக்கு எது நேர்ந்தாலும் குழந்தைகள் இன்னாரிடம் சொல்லிவிட வேண்டும் என்று யாரை நோக்கி விம்மியபடியே ஓடுகிறார்களோ... அது தான் அவர்கள்

இவ்ஆய்வு கட்டுரையின் முடிபாக, ஆயிஷா இரா.நடராசன் அவர்கள், “குழந்தைகள் வெறுக்காத பள்ளிச்சூழலை அமைத்து அப்பள்ளியில் குழந்தைகளை மதித்தல் வேண்டும். மேலும் வகுப்பறைச் சூழல் என்பது அம்மாணவர்களுக்கு ஏற்றவாறு உற்சாகமான வகுப்பறையாக அமைதல் வேண்டும். மாணவர்களின் நடத்தைகளுக்கேற்ப ஆசிரியர்களின் அணுகுமுறை அமைதல் வேண்டும்” என்கிறார்.




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்